**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்</u>**

2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 27 ஆம் நாள் செவ்வாய்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. க.இந்துமதி, கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No. 153/2017** பி.வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | சொக்கநாதன் | **வயது** | : | 74 |
| **த.பெ** | : | மாணிக்கபிள்ளை | **தாலுக்கா** | : | சேத்பட் |
| **கிராமம்** | : | நெடுங்குணம் | **தொழில்** | : | ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் |

**<u>27.01.2026 – பி.வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1)சர்வே நெம்பர் 167 ல் 8,9,10 என்னுடைய சொத்து தான் என்றால் சரிதான். மேற்படி சொத்தை நான் யாரிடமிருந்து கிரையம் வாங்கினேன் என்றால் தீன் என்பரிடமிருந்து கிரையம் பெற்றேன் எந்த வருடம் கிரையம் பெற்றேன் என்று ஞாபகமில்லை. மேற்படி சொத்தை கிரையம்பெறும்போது கிரையபத்திரத்தில் அம்மாகண்ணு சொத்திற்கு கிழக்கு என்றுதான் சக்குபந்தி காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அம்மாகண்ணு சொத்து தான் வழக்கு சொத்து என்றால் சரிதான். தாவா சொத்து நான் யாரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் குண்டால் கவுண்டர் வாரிசிடமிருந்து கிரையம் பெற்றேன். குண்டால் கவுண்டர் தாவா சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்றால் அவர் 2001 ல் செல்வம் என்பரிடமிருந்து அவர் கிரையம் பெற்றார்.

2)மேற்படி குண்டால் கவுண்டர் செல்வம் அவர்களிடமிருந்து சர்வே நெம்பர் 167/7 ஏக்கர் 1.27 பாட்டைக்கு தெற்கு, தாதாசாயபு நிலத்திற்கு மேற்கும் மற்றும் வடக்கு, குண்டால் நிலத்திற்கு கிழக்கு இதன் மத்தியில் 31 ¾ செண்டை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். நான் மேற்படி பத்திரத்தின் (**பி.சா.ஆ-2**) அடிப்படையில் தான் கிரையம் பெற்றதாக நான் கூறுகிறேன் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற பிறகு தாவாசொத்து உட்பிரிவு செய்யப்பட்டதா என்றால் சரிதான். சர்வே நெம்பர் 167/7 க்கு தெற்கு தாதா சாயபு நிலம் என்றால் சரிதான், அதற்கு வேறு சர்வே நெம்பர் என்றால் சரிதான். மேலும் தாவா சர்வே நெம்பர் 167/7 க்கு கிழக்கில் நான் வாங்கிய சொத்திற்கும் வேறு சர்வே நெம்பர் என்றால் சரிதான்.

3)வழக்கு சொத்திற்கு கிழக்கே உள்ள தாதாசாயபு சொத்தையும், தெற்கே உள்ள தாதாசாயபு நிலத்தையும் நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். செல்வம் எப்படி கிரையம் கொடுத்தாரோ அப்படிதான் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். செல்வம் பேரில் இருந்த பட்டா, சிட்டா, அடங்கல் ஆகிய ஆவணங்களை நான் வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. குண்டால் பேரில் இருந்த பட்டா, சிட்டா, அடங்கல் ஆகிய ஆவணங்களை நான் வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, குண்டால் வாரிசுதார்கள் பெயரில் பட்டா இருந்தது.

நான் கிரையம் பெற்ற கிரையபத்திரத்தின் (**பி.சா.ஆ-3**) படி சக்குபந்தி கிழக்கில் என் நிலம், வடக்கில் பாட்டை, தெற்கில் என் நிலம், மேற்கில் குண்டால் நிலம் என்றால் சரிதான், ஆனால் பி.சா.ஆ-3 ன் படி தெற்கில் அண்ணாதுரை, கன்னியம்மாள் என்று உள்ளது என்றால் அதுதான் சரி, கன்னியம்மாள் நிலத்திற்கு வடக்கில் நான் கிரையம் பெற்றுள்ளேன்.

4)**பி.சா.ஆ-3** ஆவணத்திற்கு **பி.சா.ஆ-2** ஆவணம் தான் மூலபத்திரம் என்றால் சரிதான். **பி.சா.ஆ-2** அடிப்படையில் தான் நான் தற்போது உரிமை கோருகிறேன் என்றால் சரிதான். ஆனால் **பி.சா.ஆ-2** ல் உள்ள சக்குபந்தியும் நான் வாங்கிய சக்குபந்தியும் மாறுபட்டுள்ளது, எது சரியான ஆவணம் என்றால் நான் வாங்கிய கிரையபத்திரம் தான் சரியான ஆவணம். எந்த பத்திரத்தின் அடிப்படையில் செல்வம் குண்டாலுக்கு விற்றார் என்றால் **பி.சா.ஆ-1**ன் அடிப்படையில் விற்றார், 1966 ல் ராமகவுண்டர் தனது மகள்கள் கன்னியம்மாள், மற்றும் சந்தியா அம்மாளுக்கு எழுதிகொடுத்தார். தாவாசொத்து ராமகவுண்டருக்கு தான் பாத்தியப்பட்ட சொத்தா என்று எனக்கு தெரியாது என்றால் தெரியாது.

5)**பி.சா.ஆ-1**ன்படி சொத்தானது கூட்டாகத்தான் உள்ளது தனியாக இல்லை என்றால் சரிதான். கன்னியம்மாள் மற்றும் சந்தியா அம்மாளும் எப்படி சொத்தை பிரித்துகொண்டாதர்கள் என்று எனக்கு தெரியாது என்றால் தெரியும் பயிர் வைத்து வரப்பு வைத்து பிரித்துகொண்டார்கள். அதற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் இல்லை, வடக்கில் சந்தியா அம்மாள் மற்றும் தெற்கில் கன்னிம்மாள் பயிர் வைத்திருந்தார்கள். **பி.சா.ஆ-1** ன் அசல் ஆவணம் எங்குள்ளது என்றால் கன்னியம்மாளிடம் உள்ளது. **பி.சா.ஆ-1 முதல் 3** வரை உள்ள ஆவணங்கள் குண்டால் மற்றும் செல்வம் ஆகியோர் அவர்களுக்கு உரிமை இல்லாமல் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்றால்சரியல்ல.

6)தாவாசொத்து ராம கவுண்டருக்கு உரிமையான சொத்து என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கண்ண கவுண்டர் கிரையம் பெறும்வரை சொத்து அம்மாகண்ணு அம்மாள் பெயரில் தான் பட்டா, சிட்டா இருந்தது என்றால் சரிதான், ஆனால் ராமகவுண்டர் அம்மாகண்ணு அவர்களின் கன்னியம்மாள், சந்தியா அம்மாள் அவர்களுக்கு எழுதிகொடுக்கும் போது கன்னியம்மாள் பாதுகாவலராக வைத்துதான் எழுதிகொடுத்தார், ஆகையால் தான் அவர்கள் பெயரில் பட்டா, சிட்டா இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் என் பெயருக்கு தாவா சர்வே நெம்பர் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கும்போது தாவா சொத்து அண்ணாதுரை பெயரில் இருந்ததா என்றால் கூட்டுபட்டாவாக இருந்தது.

7)**பி.சா.ஆ-3** பத்திரத்தில் எதற்காக கூட்டுபட்டா வைக்கவில்லை என்றால் நான் கிரையம் வாங்கும்போது குண்டால் கவுண்டர் வாரிசுகள் பெயரில் பட்டா இருந்தது. குண்டால் கவுண்டர் வாரிசுகள் மீது தனிபட்டா எதுவும் கொடுக்கபடவில்லை, நான் வாங்கிய பிறகு தான் தாவாசொத்து உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்றபிறகு கூட்டுப்பட்டாவிலிருந்து தனிபட்டா வேண்டி மனுசெய்த போது வாதியை அழைத்து வருவாய்துறையினர் விசாரித்தார்களா என்றால் அது எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்தபோது தாவா சொத்திற்கு அடங்கல் வாதி பெயரில் தான் இருந்தது என்றால் சரிதான். தாவாசொத்து அண்ணாதுரை கிரையம் பெற்றது

சரிதான், நான் தான் உரிமை இல்லாத நபர்களிடமிருந்து கிரையம் பெற்றதாக கூறுகிறேன் ஆகையால் இந்த வழக்கு தாவாப்படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER

Digitally signed by SALMA BASEER
Date: 2026.01.27 18:23:40 +0530

District Munsif,
Polur.